கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 72/2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இரங்கநாயகி | வயது | 34 |
| கணவர் பெயர் | அசோகன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடுத்தனம் | மதம் | |
| ஊர் | பின்னவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் பின்னவாசலில் வசித்து வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன அசோகன் எனது கணவர் ஆவார். எனது கணவர் திருவாரூரில் வண்டாம்பாளையில் உள்ள விவேகானந்தா வித்தியாஸ்ரம் பள்ளியில் ஆசியராக வேலை பார்த்து வந்தார். கடந்த 27.12.2022 ம் தேதி இரவு 08.00 மணிக்கு எனது கணவர் பள்ளி முடிந்து அவருக்கு சொந்தமான PY 02 F 2743 என்ற பதிவெண் கொண்ட Hond a duo இருச்சக்கர வாகனத்தில் வீட்டிற்கு வருவதாக வந்து கொண்டிருந்துள்ளார். எனது கணவர் திருவாரூரில் இருந்து திருத்துறைப்பூண்டி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி திருநெய்பேர் என்ற இடத்தில் வந்து கொண்டிருந்தபோது எதிர்புறம் வந்த Maxi cab வாகனம் வேகமாக வந்து எனது கணவரின் இருச்சக்கர வாகனம் மீது மோதியுள்ளது. அறிவானந்தம் என்பவர் எனக்கு போன் செய்து என் கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சொன்னார். நான் உடனே திருவாரூர் அ ரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துமவமனையில் எனது கணவரை பரசோதனை செய்து எனது கணவர் இறந்து விட்டதாக மருத்துவர் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த விபத்திற்கு காரணம் எதிர்புறம் வந்த Maxi cab வாகனத்தை ஓட்டியவர் வேகமாக வந்து மோதியதால் தான் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது கணவருக்கு விபத்து ஏற்பட்ட தகவல் கேள்விப்பட்டவுடன் நான் மருத்துவமனை தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் எதிர்புறம் வந்த Maxi cab வாகனத்தை ஓட்டியவர் வேகமாக வந்து மோதியதால் தான் ஏற்பட்டது என்பது தவறு என்றால் சரியல்ல. நான் புகாரை கைப்பட எழுதி கொடுத்தேனா என்றால் இல்லை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதி கொண்டார்கள். புகாரில் சொல்லப்பட்ட சங்கதிகள் போலீசாரால் மிகைப்படுத்தி எழுதப்பட்டவை என்றால் சரியல்ல. எனது கணவரின் இறப்புக்கு எதிரியின் செயல் காரணம் இல்லை எதிரி பொறுப்பு இல்லை என்றால் சரியல்ல.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 72/2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அறிவானந்தம் | வயது | 33 |
| தந்தை பெயர் | சந்திரசேகர் | ஜாதி | |
| தொழில் | ஏஜென்சி | மதம் | |
| ஊர் | பின்னவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் பின்னவாசலில் வசித்து ஏஜென்சியில் வேலை செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர். விபத்தில் இறந்து போன அசோகன் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். அசா.1 ன் கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 27.12.2022 ம் தேதி இரவு 07.00 மணியளவில் திருநெய்பேர் பிரசிடன்ட் தமயந்தி சோமு வீட்டின் முன் பேசிகொண்டிருந்தேன். திருத்துறைப்பூண்டியில் இருந்து திருவாரூர் சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வேன் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து கொண்டிருந்தது. அசோகன் பள்ளி முடிந்து வீட்டிற்கு பைக்கில் வந்து கொண்டிருந்தார். திருநெய்பேர் வளைவில் வந்த போது அசோகன் வந்த இருச்சக்கர வாகனம் மீது வேன் மோதிவிட்டது. சத்தம் கேட்டு நான் சென்று பார்த்தபோது அடிப்பட்டு கிடந்தது அசோகன் தான் என்பது தெரிந்தது. என் நண்பர் விக்னேஷீக்கு போன் செய்து அசோகன் அடிப்பட்ட விசயத்தை சொல்ல சொன்னேன். அதன் பிறகு 108 ஆம்புலன்சு மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர்கள் அசோகனை பரிசோதனை செய்து விட்டு அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். விபத்துக்கு காரணம் வேனை ஓட்டியவர் ஹாரன் அடிக்காமல் சரியான வேகத்தில் வந்தது தான். ஆஜர் எதிரி தான் அன்றைய தினம் வேனை வேகமாக ஓட்டினார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்த அசோகன் எனது மைத்துனர் என்றால் சரியல்ல. அவர் எனது

ஊர்க்காரர் ஆவார். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒரு வளைவு என்றால் சரிதான். அந்த வளைவுக்கு பக்கத்தில் ஒரு பாலம் உள்ளது அது சற்று மேடாக இருக்கும் என்றால் சரிதான். நான் யாருடன் பேசிக்கொண்டிருந்தேன் என்றால் சோமுடன் பேசிக்கொண்டிருந்தேன். நான் பேசிக்கொண்டிருந்தபோது இரண்டு வண்டிகளும் மோதிய சத்தம் கேட்டு நாங்கள் அங்கு சென்று பார்த்தோம் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் விபத்து சம்பவம் தமயந்திசோமு என்பவர் வீட்டுக்கு எதிரே நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். Maxi cab வானத்தை ஓட்டியவர் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி நடந்த விபத்திற்கு காரணம் மற்றும் பொறுப்பு இல்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது ஊரைச்சேர்ந்தவர் என்பதால் எதிரி அஜாக்கிரதையாகவும், வேகமாகவும் வேனை ஓட்டி வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 72/2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | வயது | 30 |
| தந்தை பெயர் | செல்லதுரை | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | பின்னவாசல் | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் பின்னவாசலில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். அவர் என் பக்கத்து வீட்டுக்காரர். விபத்தில் இறந்து போன அசோகனை தெரியும். அவர் அசா.1ன் கணவர் ஆவார். கடந்த 27.12.2022 ம் தேதி இரவு 08.00 மணியளவில் அசா.2 எனக்கு போன் செய்து உங்கள் பக்கத்து வீட்டுக்காரர் அசோகன் விபத்துக்குள்ளாகி விட்டார் என்றும், அது குறித்து அவர் வீட்டிற்கு சொல்லும்படி சொன்னார். நான் அசா.2 கூறிய தகவலை அசா.1 டமும் அசோகனின் தாயாரிடமும் தெரிவித்தேன். பின்னர் நான் எனது இருச்சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு திருநெய்பேர் முன்னாள் தமயந்தி வீட்டிற்கு முன்பு நடந்த சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சென்ற போது கூட்டமாக இருந்தது. 108 க்கு தகவல் கொடுத்திருந்தார்கள். நான் சென்று பார்த்தபோது அசோகனின் தலை Maxi cab வேனில் சொருகிய படி இருந்தது. 108 ஆம்புலன்ஸில் வந்தவர்களுடன் நானும் சேர்ந்து அசோகனின் உடலை இழுத்தோம். காயம்பட்ட அசோகனை ஆம்புலன்சு மூலம் திருவாரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மருத்துவர்கள் அசோகனை பரிசோதனை செய்து விட்டு அவர் இறந்து விட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்து போன அசோகன் எனது உறவினர் என்றால் சரியல்ல. எனது பக்கத்து

வீட்டுக்காரர் ஆவார். அசா.2 என்னிடம் தகவல் சொன்னதாக சொல்லப்படும் சங்கதி தவறு என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் என்னிடம் தகவல் சொல்லியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.